# உழைக்கும் வர்க்கம் நிறைந்த திருப்பூரில் தொழிலாளர்களின் பாதுகாவலர் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் குவிந்தனர் காணீர்!



## பண மதிப்பிழப்பு முதல் ஜி.எஸ்.டி. வரை தொழில் துறையை சீரழித்த பா.ஜ.க.வினர் எந்த முகத்தோடு வாக்குக் கேட்கிறார்கள்!

# அடிமைக் கூட்டத்திற்கு தமிழ்நாடு சரியான பாடம் புகட்ட வேண்டும்!

## திருப்பூர் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

திருப்பூர், ஏப்.20-

**பணமதிப்பிழப்பு முதல் ஜி.எஸ்.டி. வரை பல நடவடிக்கைகளால் தொழில்துறையைச் சீரழித்து விட்டு எந்த முகத்தோடு பா.ஜ.க.வினர் வாக்கு கேட்டு வருகின்றனர்? எனவும், வெகுமானத்திற்காகத் தன்மானத்தை இழந்து இனமானத்திற்குத் துரோகம் செய்கின்ற அடிமைக் கூட்டத்திற்குத் தமிழ்நாடு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்றும் திருப்பூரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.04.2026) திருப்பூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

பல்வேறு அரசியல் திருப்பங்களுக்கு அடித்தளம் அமைத்த திருப்பூருக்கு, நேற்று இந்தியாவிலேயே ஒரு மாபெரும் அரசியல் திருப்பத்தை ஏற்படுத்திய மகிழ்ச்சியோடு நான் வந்திருக்கிறேன்.

**சூப்பர்ஸ்டாரின் ஒரு பாட்டுதான் எனக்கு நினைவிற்கு வருகிறது.**

**“என்கிட்ட மோதாதே... நான் ராஜாதி ராஜனடா...” அந்தப் பாட்டை கொஞ்சம் மாற்றி பாடட்டுமா... “என்கிட்ட மோதாதே... இது பெரியாரின் தமிழ்நாடடா... வம்புக்கு இழுக்காதே, இது அண்ணாவின் கோட்டையடா... இனி தப்பாட்டம் என்னோடு ஆடாதே, அட அப்புறமா குட்டுப்பட்டு ஓடாதே...” இதைத்தான் இப்போது தமிழ்நாடே பாடுகிறது.**

### நமது கருப்புக் கொடி காவிக் கொடியை வீழ்த்தியது!

நாம் பறக்கவிட்ட கருப்புக் கொடி, பா.ஜ.க. பறக்கவிடத் துடித்த காவிக் கொடியை வீழ்த்தியிருக்கிறது. போர் என்றால், வெற்றி ஒன்றுதான் குறி. நம்முடைய குறி தவறவில்லை. இதுதான் தி.மு.க.! இதுதான் தமிழ்நாடு! இதுதான் திராவிட மாடல்!

Delimitation எனும் பேராபத்தை 2023-லேயே உணர்ந்து, நாட்டில் முதன்முதலாக எதிர்க்கத் தொடங்கியது நம்முடைய தி.மு.க.தான்.

இதனால் பாதிக்கப்படும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்களை அழைத்து, சென்னையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அதில் சில தீர்மானங்களை நிறைவேற்றினோம். ஒரு கூட்டு நடவடிக்கை குழு உருவாக்கினோம். தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தித் தீர்மானம் போட்டோம். ஏன், சட்டமன்றத்திலும் தீர்மானம் போட்டோம்.

அப்போது இரட்டை நாக்கு கொண்ட அ.தி.மு.க. சட்டமன்றத்தில் ஒரு பேச்சு பேசினார்கள். வெளியே போய் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. நாடகம் போடுகிறது என்று நா கூசாமல் பேசினார்கள்.

### நாமக்கல்லில் நான் பற்ற வைத்த தீ நாடு முழுவதும் பரவியது!

இப்போது மூன்று நாட்களுக்கு முன்பு, இந்த மசோதா வந்தவுடனே, கருப்புக் கொடி போராட்டம் நாம் செய்தோம். அந்தச் சட்ட மசோதாவின் நகலை எரித்தோம். நாமக்கல்லில் பற்ற வைத்த தீ, நாடு முழுக்கப் பரவியது. அதனுடைய வெப்பம், நேற்று பார்லிமெண்ட்டில் அந்தச் சதித் திட்டத்தை எரித்துச் சாம்பலாக்கியது.

தமிழ்நாட்டின் உரிமைப் பிரச்சினையில் அ.தி.மு.க. அடிமைகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? “ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு சிறப்பாகச் செய்யும், அமித்ஷாவே சொல்லிவிட்டார்” என்று சொன்னார்கள்.

இப்படிச் சொந்த மாநிலத்திற்கும் - மக்களுக்கும் எதிராக நடந்து கொள்ளும் பழனிசாமி அ.தி.மு.க. போன்ற ஒரு நாணயமற்ற கட்சியை உலக வரலாற்றிலேயே யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்வதுதான் பழனிசாமி அ.தி.மு.க.



> ### தமிழ்நாடு சரியான பாடம் புகட்ட வேண்டும்!
>
> **சுயநலத்திற்காகத் தமிழ்நாட்டின் உரிமைகளை காவு கொடுக்கத் துணிந்துவிட்ட பழனிசாமிக்குத் தமிழ்நாடு பதினோராவது தோல்வியைக் கொடுக்க வேண்டும். வெகுமானத்திற்காகத் தன்மானத்தை இழந்து இனமானத்திற்குத் துரோகம் செய்யும் அடிமைக் கூட்டத்திற்குத், தமிழ்நாடு சரியான பாடம் புகட்ட வேண்டும்.**

அடிமைகளிடம் மறுபடியும் தமிழ்நாடு சிக்கலாமா? சிக்கினால் தமிழ்நாடு தமிழ்நாடாக இருக்குமா? நிச்சயம் இருக்காது. அதைத் தடுக்க வேண்டும். தமிழ்நாட்டை அடிமை அ.தி.மு.க.விடமும் இருந்தும் - மதவாத பா.ஜ.க.விடமும் இருந்தும் பாதுகாக்க வேண்டும். அதற்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு கேட்டு நான் வந்திருக்கிறேன்.

### உங்களிடம் ஒப்படைத்துள்ள வெற்றி வேட்பாளர்கள்!

இப்போது வேட்பாளர்களை அறிமுகம் செய்கிறேன்.

முதலில் காங்கேயம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மு.பெ. சாமிநாதன் அவர்கள். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர். மாண்புமிகு அமைச்சர். அமைச்சராக கடந்த ஐந்தாண்டு காலத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு தலைவர்களுக்கும் - தமிழறிஞர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்பிய சாதனைக்குச் சொந்தக்காரர். இளைஞரணியை நான் தலைமையேற்று நடத்திய காலம் முதல் தொடர்ந்து என்னோடு பயணிப்பவர். அவருக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, பல்லடம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் செல்வராஜ் அவர்கள். மாவட்டக் கழகச் செயலாளர். திருப்பூரின் நகர் மன்றத் தலைவர் - திருப்பூர் மாநகராட்சியின் முதல் மேயர் - சட்டமன்ற உறுப்பினர் என்று, தன்னுடைய பொறுப்புகள் மூலம் திருப்பூரின் உள்கட்டமைப்பை வளர்த்த சிறப்புக்குச் சொந்தக்காரர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தினேஷ் குமார் அவர்கள். கழகத்தின் மாவட்டச் செயலாளர். திருப்பூர் 49-வது வார்டு மாமன்ற உறுப்பினராக இருந்து, திருப்பூர் மாநகராட்சி மேயராக உயர்ந்திருக்கிறார். திருப்பூரின் ஒவ்வொரு பகுதியையும் கவனித்துப் பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கும் ஒரு சாதனையாளர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்கினை வழங்க வேண்டும்.

அடுத்து, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தோழமை இயக்கமாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம். ரவி என்ற எம். சுப்ரமணியன் அவர்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் வட்டாரச் செயலாளராக - திருப்பூர் மாவட்டச் செயலாளராகச் செயல்பட்ட இவர், இப்போது மாநிலத் துணைச் செயலாளராக இருக்கிறார். திருப்பூர் நகராட்சி உறுப்பினராக பதினைந்து ஆண்டுகள் மக்கள் பணியாற்றியவர். அவருக்கு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

### கொள்கைத் தெளிவுமிக்க நமது வேட்பாளர்கள்!

அடுத்து, அவினாசி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் கோகிலாமணி அவர்கள். களத்தில் நிற்கும் இளம் வேட்பாளர். அவிநாசி ஒன்றிய கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர். நம்பியாம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவராக இருந்த அவர், அதிலிருந்து விலகிவிட்டுத் தேர்தலில் போட்டியிடுகிறார். கொள்கைத் தெளிவோடு இவர் கொடுத்த பேட்டி சோஷியல் மீடியாவில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, தாராபுரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் இந்திராணி அவர்கள். மருத்துவர் இந்திராணி, மக்கள் பணியாற்ற வந்திருக்கிறார். திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக மருத்துவர் அணி அமைப்பாளர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மு. ஜெயக்குமார் அவர்கள். மாணவராக இருந்த காலம் முதல் நம் கழகத்திற்காக உழைத்து வருபவர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே கல்லூரி ஆசிரியர் பணியை ராஜினாமா செய்துவிட்டு முழு நேரக் கழகத் தொண்டராகச் செயல்படத் தொடங்கியவர். திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும் - உடுமலைப்பேட்டை நகர் மன்ற உறுப்பினராகவும் இருப்பவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள். 2016 தேர்தலில் மடத்துக்குளம் தொகுதியில் வென்றவர். முப்பது ஆண்டுகளாகக் கழகத்தின் சார்பில் மக்கள் தொண்டு ஆற்றி வரும் இவர், திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத்தலைவராக இருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

இங்கே நிற்கும் வேட்பாளர்களின் வெற்றி உறுதிதானே... நன்றி! வேட்பாளர்கள் அமரலாம். உங்கள் வெற்றி கன்பார்ம் ஆகிவிட்டது.

### திருப்பூர் அடைந்திருக்கும் மாற்றமும் - வளர்ச்சியும்!

**திராவிட மாடலால், இந்த திருப்பூர் அடைந்திருக்கும் மாற்றத்தையும் - வளர்ச்சியையும் நீங்கள் அனைவரும் கண்கூடாகப் பார்க்கிறீர்கள். அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் ஹைலைட்ஸாகச் சொல்ல வேண்டும் என்றால்,**

**நொய்யல் ஆறு மேம்பாட்டிற்கான பணி,**

**பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட கால்வாய் தூர்வார 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு,**

**தாராபுரம் தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**சொர்ணபுரி லே அவுட் பகுதியில் சங்கிலிப்பள்ளம் ஓடையின் குறுக்கே உயர்மட்டப் பாலம்,**

**தந்தை பெரியார் நகர் பக்கத்தில் ஜம்மனை ஓடையின் குறுக்கே உயர்மட்டப் பாலம்,**

**கீழக் கோவில் வழி பகுதியில் பேருந்து நிலையம்,**

**பில்லூர் நீர்த்தேக்கத்தை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்,**

**காங்கேயம் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம்,**

**தாராபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம்,**

**வேலம்பாளையத்தில் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம்,**

**உடுமலைப்பேட்டையில் விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்குத் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம்,**

**சிவன்மலை மற்றும் நஞ்சியம்பாளையத்தில் சிறு விளையாட்டு அரங்கம்,**

**ஐந்து சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள்,**

**திருமுருகன்பூண்டி நகராட்சிப் பகுதியில் மினி டைடல் பார்க்,**

**328 திருக்கோயில்களில் திருப்பணிகள்,**

**கொங்கல் நகரம் கிராமத்தில் முதற்கட்ட அகழாய்வு நிறைவு,**

**புஞ்சை ஊத்துக்குளி கிராமத்தில் இருக்கும் நந்தவனக் கிணறு பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது,**

**தாராபுரம் தெற்கு கிராமத்தில் கல் இசை மண்டபம், பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.**

### திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும்!

இந்தச் சாதனைச் சரித்திரம் தொடர, திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். நான் கேட்பதெல்லாம், இந்த மாதிரி எதையாவது கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் செய்திருக்கிறார்களா? இல்லவே இல்லை. அவர்களின் ஓனராக இருக்கும் பா.ஜ.க.வாவது செய்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. அவர்களால் நீங்கள் பட்ட வேதனை ஒன்றா? இரண்டா? சிலவற்றை மட்டும் சொல்கிறேன் கவனியுங்கள்.

தொடர்ச்சி 6 –ஆம் பக்கம்